
74

மாத இதழ் • 80 காசு • ஏப்ரல் • 1987




FREE E - BOOKS , www.thamizham.net.,

# கவிதைகள்

தேவ கோட்டையில் சுதந்திர
போராட்ட தியாகி
பிச்சையெடுக்கிறார்.
—செய்தி (தினமலர்)

யாரய்யா ... இந்த கிழவன்?
நாங்கள்
இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி
போய்க்கொண்டிருக்கும்போது
குறுக்கே!

நீ
வெள்ளைக்காரன் காலத்தில்
இல்வளவு சுதந்திரமாய்
பிச்சையெடுத்திருக்க முடியுமா?

— இராஜாதி ராஜன்



மந்திரியின் மாப்பிள்ளை
வரதட்சணையாகக்
கேட்டார் —
ஒரு வாரியத் தலைவர்
பதவியை.

— பிருந்தாசாரதி



கோயிலுக்கு அருகில்
கல்விக்கூடத்துக்கு எதிரில்
கடைவீதியில்
ஓலைக் குடிசையில்
ஒதுக்குப் புறமாய்
தோப்பில்
தட்டுப்பாடின்றி
'தண்ணி' கிடைக்கும்
போது
தமிழ்நாட்டில்
தண்ணீர்ப் பஞ்சம் என்று
சொல்வது யார்?

—புலேந்திரன்

அடக்கடவுளே...
விபத்தில்
தப்பியதற்காக
பிரார்த்தனை
செய்யப் போனபோது
விபத்துக்குள்ளாகி
மடிந்தான்!

—பூங்கணியன்

ஏழைகள்
ஏற்றிய தேசிய கொடி
அரைக்கம்பத்திலேயே
பறக்கிறது.
யாருக்கும் அஞ்சலியல்ல;
கயிற்றுக்குத்தான்
காசுப்பஞ்சம்!


— தா. கண்ணாகுட்டி

விலங்குகளை
உடைத்து
உயர்ந்தன கரங்கள் —
பிச்சையெடுக்க!

— இராஜாதி



FREE E - BOOKS , www.thamizham.net.,



# மருதையாறு பாலத்துக்கு விசேஷ பூஜை!

## —அமைச்சர் மாதவராவ் சிந்தியா

'பட்ட காலிலேயே படும்; கெட்ட குடியே கெடும் என்று கூறப்படுவது போல் அரியலூர் அருகே மருதையாறு பாலம் 30 வருஷத்தில் 2வது முறையாக ஏராள உயிரை குடித்துள்ளது. 1956ம் ஆண்டு நவம்பரில் பெரு மழையையடுத்து மருதையாற்றில் பெரும் வெள்ளம் ஏற்பட்டதால் பாலம் மூழ்கியது. சென்னையிலிருந்து சென்ற தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் இந்தப் பாலத்திலிருந்து விழுந்து பல பெட்டிகள் மூழ்கியதில் 140 பேர் மாண்டனர். சென்ற ஞாயிறு அதிகாலை மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் இந்தப் பாலத்திலிருந்து கவிழ்ந்ததில் 24 பேர் மாண்டனர்.

எனவே இந்தப் பாலத்தில் ஏதோ 'துர் தேவதை' உள்ளது. அந்த துர்தேவதையை விரட்ட இந்த பாலத்தில் விசேஷ பூஜை நடத்தலாம் என்று மத்திய ரயில்வே துணை அமைச்சர் மாதவராவ் சிந்தியா ரயில்வே நிர்வாகத்துக்கு யோசனை தெரிவித்தார்.

தென் ரயில்வே ஜெனரல் மானேஜர் பாலகிருஷ்ணன் மருதையாறு பாலத்தில் நடந்த இநத மோசமான விபதது குறித்து கவலை தெரிவித்த போது அமைச்சர் மாதவராவ் சித்தியா மேற் கூறிய யோசனையை கூறினர்.

—தினமணி

போக்குவரத்து விதிகள் இனி தேவையில்லை. ரயில்வே சிக்னல்களைப் புறக்கணிக்கலாம். தண்டவாளங்களுக்குப் பாதுகாப்பு வேண்டாம். எனினும், விபத்துக்கள் நடவாது. அதான் ரயில்வே துணை மந்திரி கூறிவிட்டாரே! எல்லா விபத்துக்களுக்கும் காரணம் துர்தேவதை நடமாட்டமாம். விபத்துக்களைத் தடுப்பதற்கோ, விபத்திற்குக் காரணமானவர்களைக் கண்டு பிடிப்பதற்கோ துணை மந்திரிக்கு யோக்யதை இல்லை.

எனவே—

பூஜைகள் செய்வோமே! விபத்துக்களை வெல்வோமே! பயணிகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்! ●



FREE E - BOOKS , www.thamizham.net.,

பேட்டி

# கவிஞர் பாலா



**அண்ணா, கருணாநிதிக்குப் பிறகு 'திராவிட எழுத்தாளர்கள்' யாரும் உருவாகாதது ஏன்? திராவிட கழகப் பாணி இலக்கியங்களின் (?!) தோல்விக்குக் காரணம் என்ன?**

மிகை உணர்ச்சியும் அதீதக் கற்பனையும் நிறைந்த எழுத்து திராவிட இயக்க பாணி எழுத்து. பழமை உடைப்பு, பழமை வழிபாடு இரண்டும் நிறைந்த அதிசய உலகம் அவர்களுடையது. இவை நவீன இலக்கிய வகைகளான சிறுகதை, நாவலுக்கு பொருந்தி வராது என்பதை முதல் காரணமாகச் சொல்லலாம். எல்லா வகை அரசியல் எழுத்தின் முடிவு இப்படித்தான் என்பதைக் கடைசிக் காரணமாகச் சொல்லலாம்.

திராவிட இயக்கத்திலிருந்து கிடைத்த நா. காமராசன், அப்துல் ரகுமான், சுரதா, மீரா எல்லோரும் கவிஞர்களாக வந்திருப்பது கருதற்குரியது. ஆயினும் ஒரு விஷயம் நாம் மறக்கலாகாது: நல்ல இலக்கியங்கள் எப்போதும் தோல்வி அடைவதில்லை.

**நடிகர்கள், அரசியல் வாதிகள், விளையாட்டு வீரர்கள் — இவர்களுக்குக் கிடைக்கிற வரவேற்பு எழுத்தாளர்களுக்கு இல்லாமற் போனதேன்?**

பணம், அதிகாரம், வாய்ப்பு, வசதி ஆகியவற்றை 'வரவேற்பு' என்றா சொல்கிறீர்கள்? நிரந்தர மரியாதை ஒரு சிறு வட்டத்திலாவது எழுத்தாளர்களுக்கே கிடைக்கிறது.

**சமீபத்தின் விவாதத்திற்குரிய நூல் எது?**

எதையும் அறிவுபூர்வமாக விவாதிக்கப் பழகாத சூழலில் இன்று நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். விவாதிக்கப்பட வேண்டிய நூல்கள் இருக்கட்டும், கவனிக்கப்பட வேண்டிய நூல்களையே நாம் இன்னும் கவனிக்கவில்லையே. இப்போது எனக்கு அகடமி நடுவர் பதவி கிடைத்தால் நான் பரிசளிக்க விரும்பும் நூல் தமிழவன் எழுதிய 'ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்' என்ற நாவலிற்குத்தான்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

இன்றைய பத்திரிகை வாசகர்களை எவ்விதம் வகைப் படுத்துகிறீர்கள்?

வைக்கோல் மறந்து போய் சுவரொட்டிகளை மென்று வயிறு வளர்க்கும் பட்டணத்து மாடுகள் மாதிரி எதைக் கொடுத்தாலும் மென்று நிற்கும் பெருந்தீனிக் காரர்கள் பெரிய பத்திரிகை வாசகர்கள். பசுப் புல்லைக் கனாக் கண்டு காகிதம் நுகர மறுக்கும் கிராமத்துப் பசுக்கள் மாதிரி சிறு பத்திரிகை வாசகர்கள்.

இவர்களைத் தவிர எதிர்காலத்தில் எழுத்தாளனாகலாம் என்ற கனவோடு காசைக் கரைக்கும் கனவுக்காரர்கள் ரகத்தில் மற்றவர்கள்.

இசையமைப்பாளர்களின் வீட்டுக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் கவிஞர்களுக்கு உங்களது ஆலோசனை என்ன?

மனிதர்கட்கு தங்கள் அபிலாஷைகளை சுயாதீனமாகத் தேட சுதந்திரம் வாய்ப்பளித்திருக்கிறது. அதில் நான் குறுக்கிட விரும்பவில்லை.

கேள்விகள்: நா. தென்னிலவன். ●●





இதுவரை தமிழில் வெளிவராத பகத்சிங்கின் கடிதங்கள் அறிக்கைகளின் மொழிபெயர்ப்புகள்.

□

□

பகத்சிங்கின் உறவினர்கள், நண்பர்கள் அரசியல் தலைவர்களின் பேட்டிகள்.

கனிமுத்துப் பதிப்பகம்

அம்பாள் பில்டிங்,

727, அண்ணா சாலை சென்னை-600 006

விலை ரூ. 18




FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுந்தர ராமசாமி

**திரைப்படங்கள் ஏற்படுத்திய அதே தீய பாதிப்பை தொலைக் காட்சியும் செய்யும் அபாயம் இருக்கிறதா?**

நிச்சயமாக இருக்கிறது. தொலைக்காட்சியை—முக்கியமாக தமிழ்த் தொலைக்காட்சியை—வீட்டுக்குள் வருகை தரும் தமிழ் சினிமாவின் மற்றொரு அவலம் என்றே கூற வேண்டும். தமிழ்சினிமாவின் சீரழிந்த கூறுகளே இங்கும் பிரதிபலிக்கின்றன.

தமிழ் சினிமா லாப வேட்கையை மட்டுமே நோக்கமாகக் கொண்டது. தார்மீக, சமூக நோக்கங்கள் கொண்டிருப்பதுபோன்ற பாவனை காட்டி, மக்களின் பலவீனமான உணர்ச்சிகளைச் சுரண்டிக் கொண்டிருக்கிறது. மக்களை ஏமாற்றுவதற்கு தரங்கெட்ட அரசியல்வாதிகள் பயன்படுத்திய சினிமாவின் மற்றுமொரு பிரதிபலிப்பே தொலைக்காட்சி.



இன்றைய வாழ்க்கையின் யதார்த்தம் இன்றைய தொலைக்காட்சியில் பிரதிபலிப்பதில்லை. ஒன்றில் அது மேல்தட்டு வாழ்க்கையின் மின்னாமினுப்பைக் காட்டும். அல்லது கீழ்த்தட்டு வாழ்க்கையைப் பிரதிபலிப்பது போன்ற பாவனை காட்டி அங்குள்ள பிரச்சினைகளையும் அவற்றிற்கான காரணங்களையும், விடைகளையும் திரித்துக்காட்டும். பெரிதும் மேலோட்டமான விஷயங்களை அசட்டு நகைச்சுவையில் ஆழ்த்தி, சினிமா ரசிகர்களின் ஆமோதிப்பைப் பெறுவதையே பெரும்பாலும் தொலைக்காட்சியும் நோக்கமாக் கொண்டிருக்கிறது. தொலைக்காட்சி மையம் ஒரு சுதந்திரமான கலைக்கூடமும் அல்ல. ஆட்சி புரியும் அரசியலுக்கு மறைமுகமாக ஆள் பிடித்துத் தரும் இழிந்த காரியத்தைத்தான் மக்கள் கலை, மக்கள் கல்வி என்ற பெயர்களில் அது செய்து கொண்டிருக்கிறது.

உண்மையில் தொலைக்காட்சி ஒரு சக்தி வாய்ந்த சாதனம். இந்தியாவைப் போன்று கல்வி அறிவு பின்தங்கிய ஒரு தேசத்தில், காட்சிப் பரிமாணமான இக்கலையைச் செம்மையாகப் பயன்படுத்துவதன் மூலம் பெரும் கலாச்சாரப் புரட்சியையே உருவாக்கிக் காட்ட முடியும். உன்னதக் கலைகளையும், உன்னதக் கல்வி அறிவுகளையும்

→



FREE E - BOOKS , www.thamizham.net.,

விஞ்ஞான மனோபாவத்தையும், மேலான பழக்கவழக்கங்களையும், ஆரோக்கிய விதிகளையும், மருத்துவ ஞானங்களையும், மனித உறவுகளை மேன்மைப்படுத்தும் படைப்புக்களையும் உருவாக்கிக் காட்ட முடியும். மனிதனை நேசிப்பவனே வாழ்க்கையை நேசிக்கிறான். மனித நேயம் கொண்டவனே கலைச் சாதனங்களையும் செம்மையாகப் பயன்படுத்த முடியும். அரசியல் கயவர்கள் கலைஞர்கள் அல்ல.

# பதில்கள்

**அண்ணாவின் பெயரை வைத்து கட்சி நடத்துபவர்கள், அண்ணாவையும், குடும்பத்தினரையும் அடியோடு மறந்து விட்டார்களாமே!**

**ராணி அண்ணாதுரை :**

எம். ஜி. ஆர். அமெரிக்காவிலிருந்து வந்த பிறகு இன்னும் அண்ணா சமாதிப் பக்கம் போகவே இல்லை. அதுவும் எனக்கு வேதனை. பதவியில் இருக்கிறவங்களே நம்மை ஒதுக்கறாங்க ... பல பேருக்கு அண்ணாவே மறந்து போச்சு. அவரை மறக்கட்டும். அவருடைய எழுத்தைக் கூடவா பாதுகாக்கக் கூடாது?

1985-ம் வருஷம் அவர் அமெரிக்காவிலிருந்து உடம்பு நல்லானத்துக்குப் பிறகு குடும்பத்தோட ராமாவரம் தோட்டத்துக்குப் போய் பார்த்தேன்.

நான் அவரைப் பார்க்கறத்துக்குக் கூட ஏகக்கெடுபிடி. லேசில பார்க்க விடலை. யார், என்னென்று வந்து குறிச்சிக்கிட்டு பிறகு தான் உள்ளே கூப்பிட்டாங்க.

பேத்தி கண்மணி, எங்க வீட்டுக்காருக்கு ரொம்ப செல்லம். சின்ன வயசிலிருந்து கண்மணிக்கு எம். ஜி. ஆருன்னா உசிறு. எம். ஜி. ஆர். கட்சி ஆரம்பிச்சவுடனே ஷூட்டிங்குக்குப் போகும் போது கண்மணியைத் தூக்கிட்டு போயிடுவாரு. சாயங்காலம் கொண்டு வந்து விடுவாரு.

......எம். ஜி. ஆர். அவ கல்யாணத்துக்கு வரவேயில்லை... கருணாநிதியைக் கூப்பிட்டதினால் எம். ஜி. ஆருக்குக் கோபம் வந்திருச்சோ என்னவோ?......



FREE E - BOOKS , www.thamizham.net.,

எம். ஜி. ஆர். போகட்டும். நாவலரைச் சொல்லுங்க. உள்ளூர்ல இருந்துக்கிட்டே வாழ்த்துத் தந்தி அனுப்பி னாரு. நாவலருக்கு நாங்க என்ன கெடுதல் பண்ணினோம். அன்பழகன், நாஞ்சில் மனோகரன் கூட கல்யாணத்துக்கு வரலை. எங்களை ஏன் இப்படி ஒதுக்கறீங்கன்னுதான் கேட்கறேன். எங்க வீட்டுக்காரருக்குப் பவள விழா எடுத்தாங்க. அதுக்கும் எங்களைக் கூப்பிடலை.

அண்ணா எங்கிருக்கிறார்...?

மு. கருணாநிதி:

நம் இரத்த ஓட்டத்திலே சுழன்றோடும் ஒவ்வோர் அணுக்களிலும் உயிரோடு உலாவிக் கொண்டிருக்கிறார். அவர் நம் நாடி நரம்புகளையெல்லாம் முறுக்கேற்றிக் கொண்டிருக்கிறார். அவர் எங்கும் இருக்கிறார். தமிழர் களோடு இருக்கிறார்.

உங்கள் தொண்டர்கள் தினமும் துதிப்பதற்கு எந்த தாரக மந்திரத்தை பரிந்துரை செய்கிறீர்கள்?

எம். ஜி. ஆர்:

அண்ணா நாமம் வாழ்க!





FREE E - BOOKS , www.thamizham.net.,

# சீருடை

வீட்டிற்கு வந்த ரெங்கநாதனிடம் அவரது மகன் 'சீனு' சொன்னான்.

"அப்பா... தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு எல்லாம் புத்தகம் வழங்கறதுக்காக சனிக்கிழமை எங்க ஸ்கூலுக்கு அமைச்சர் வராராம்... அன்னைக்கு எல்லா மாணவர்களும் யூனிஃபார்ம்ல வரனும்னு எங்க ஹெட்மாஸ்டர் ஆர்டர் போட்டிருக்காருப்பா...!"

"சரி...!"

"இத்தனை நாளும் யூனிஃபார்மே இல்லாமல் எப்படியோ ஒப்பேத்திட்டடம்ப்பா... ஆனால் சனிக்கிழமை யூனிஃபார்ம் போடாமல் போனேன், நிச்சயம் ஸ்கூல் உள்ளாற விடமாட்டாங்க... அதனால, அப்பா... எனக்கு எப்படியாவது ஒரு யூனிஃபார்ம் நீ எடுத்துதான் ஆகணும்...!"

ரெங்கநாதன் அதிர்ந்து போனார்,

"என்னடா சொல்றே... இப்படி திடீர்ன்னா நான் பணத்துக்கு எங்கடா போவேன்?..."

"அப்பா உன்னை என்ன டெரிகாட்டன்லயா எடுத்து தரச் சொல்றேன்... நம்ம ஊர் சொசைட்டியிலே கண்ட்ரோல் கிளாத் வந்திருக்காம்... மீட்டர் ஆறு ரூபாய் தானாம்... அதுல எடுத்தன்னாலே போதும்...!"

"சரி...பார்ப்போம் ...!" என்ற ரெங்கனாதன் கடனாக இருபது ரூபாய் வாங்கிக் கொண்டு 'சொசைட்டி' க்குப் போய் அந்த 'கண்ட்ரோல் கிளாத்' பற்றி விசாரித்தார்.

அதற்கு—

அந்த சொசைட்டிக் காரர் சொன்னார்.

"நம்ப ஊருக்கு சனிக்கிழமை மந்திரி வராருல்ல...... அவரை வரவேற்று பேனர் எழுதி ஊர் முழுக்கலும் கட்டனும்ங்கறத்துக்காக... ஆளுங்கட்சிக் காரங்க வந்து அந்தக் கண்ட்ரோல் கிளாத்தை மொத்தமாய் வாங்கிட்டு போய்ட்டாங்க...!"

— நாகை. பொன்னி

சிறுகதை



FREE E - BOOKS , www.thamizham.net.,

மாத நாவல்

# ஆபாசங்கள்



★ ராணி நிறுவனத்தார் தமது எட்டாய தர வாசகர்களுக்கு நாவல்களை அறிமுகப்படுத்த எண்ணினார்கள். வெளிவந்த நாவல்களை அவர்கள் நிர்ணயித்த பக்க அளவிற்குத் தக்கவாறு உள்ளவாறோ, சுருக்கியோ வெளி இட்டனர். ராணி முத்து 'வதந்தி வேகத்தில்' பரவியது. தனது படைப்பை யாரும் எடிட் செய்யக் கூடாது என்பதில் கவனமாக இருக்கும் ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' சுருக்கி வெளியானது. கருணாநிதி முதல்வரானதும் அவரது வெள்ளிக்கிழமை நாவல் ராணிமுத்து வில் பிரசுரம் பெற்றது.

★ ராணிமுத்துவின் விற்பனை குமுதம் நிறுவனத்தை நாவல்களின் பாற் ஈர்த்தது. மாலைமதி தொடங்கப்பட்டு நாவல் வியாபாரம் சூடு பிடித்தது. குமுதம் எதைச் செய்தாலும் காப்பியடிக்கக் காத்திருக்கும் மற்றவர்களும் இதைச் செய்தனர்.

★ பல பதிப்பகங்கள் மாத நாவல்களைக் கண்டு பயந்தன. முன்பு பதிப்பகம் வெற்றிகரமாக நடத்த நாவல்கள் உதவியிருந்தன. 1978க்குப் பிறகு பதிப்பகங்கள் நாவல்களை நம்புவதை நிறுத்தின.

★ 20,000 ரூபாய் முதலீடு செய்தால் நாவல் வெளியீடுகளை வெற்றிகரமாக நடத்தலாம் என்பது இன்றைய நிலை. எழுதித்தர ராஜேஷ்குமார், ராஜேந்திர குமார், பட்டுக்கோட்டை பிரபாகர், புஷ்பா தங்கதுரை என்று ஒரு கும்பலே இருக்கிறது. இந்த மாத நாவல் உற்பத்தியாளர்களின் பெயர் இருந்தால் போதும், குறைந்தது 15,000 பிரதிகள் விற்றுத் தீர்ந்து விடுகின்றன. (பதிப்பகங்கள் வெளியிடுகிற நாவல்கள் 1200 பிரதிகள் விற்பதற்கு 3 வருடங்கள் ஆகும்.)

★ மாத நாவல் என்பது இப்போது மாதமிரு முறை, வாரம் ஒருமுறை என்கிற அளவிற்கு வந்து விட்டது. பாக்கெட் சைஸ் என்று வடிவம் பற்றிய பெயர்களிலும் உலவுகின்றன.

★ மூளையை அதிகமாக செலவு செய்ய விரும்பாதவர்கள், நீண்ட பயணம் செய்பவர்கள், சோம்பற் சுகத்தில் அமிழ்ந்தவர்கள், மேலோட்டப் படிப்பாளிகள்,

# ஆங்கில வீக்கம்

| மொழி | பேசுவோர் தொகை |
|---|---|
| சீனம் | 70 கோடி |
| ஆங்கிலம் | 35 கோடி |
| இந்தி | 20 கோடி |
| ரஷ்யன் | 20 கோடி |
| ஸ்பானியம் | 45 கோடி |
| ஜெர்மன் | 10 கோடி |
| ஜப்பான் | 10 கோடி |
| அராபியம் | 9 கோடி |
| வங்காளம் | 9.5 கோடி |
| போர்த்துக்கீசியம் | 8 கோடி |
| மலாய் | 8.5 கோடி |
| பிரெஞ்சு | 8 கோடி |
| இத்தாலியம் | 6.5 கோடி |
| தமிழ் | 6 கோடி |

மிக வேகமாக பரவிய மொழிகளில் ஆங்கிலம் முதன்மையானது. ஆங்கிலம் பேசுவோர் தொகை 11ஆம் நூற்றாண்டில் 15 லட்சம் பேராகத்தான் இருந்தது. அது 18ஆம் நூற்றாண்டில் 85 லட்சமாக உயர்ந்தது. 19ஆம் நூற்றாண்டில் 1 கோடியே 23 லட்சமாக ஆனது. இந்த நூற்றாண்டில் அதன் அசுர வளர்ச்சியால் 35 கோடி பேர் பேசுகிறார்கள்.

ஆங்கிலத்தின் தாக்கம் மற்ற மொழிகளின் தனித் தன்மையை அழித்துள்ளது. அதே போல தனது தனித் தன்மையையும் இழந்து தவிக்கிறது ஆங்கிலம்.

---

வேலை பார்க்கும் அல்லது வீட்டில் அடைந்து கிடக்கும் பெண்கள், கல்லூரி மாணவ மாணவியர்— இவர்கள் தான் நாவல்களின் ஆதரவுத் தீவிரவாதிகள்.

★ இத்தகைய நாவல்கள் முகமூடி அணிந்த செக்ஸ் புத்தகங்களாக செயல்படுகின்றன. (''கையடக்க விலை மகள்கள்'' — அறிவுமதி)

★ வறுமை, மலேரியா, ஊழலைப் போன்று இத்தகைய நாவல்களும் ஒழிக்கப்பட வேண்டியவையே!

— நா. தென்னிலவன்.

---



FREE E - BOOKS , www.thamizham.net.,

காசிதட்டிவாசித்தவை

# கட்டபொம்மன் கொள்ளைக்காரனா?




ம. பொ. சி. யும், தமிழ்வாணனும் வீரபாண்டியக் கட்ட பொம்மனைப் பற்றி விரிவாகவே 'வெளுத்து'க் கட்டியிருக்கிறார்கள். 'அவன் தான் முதல் சுதந்திரப் போரின் நாயகன்' என்று ம. பொ. சி. யும், 'அவனா? அவன் கொள்ளைக் காரனாயிற்றே!' என்று தமிழ்வாணனும் இரண்டு துருவங்களாய் நின்று ஒரே மனிதனை விமர்சித்திருக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவெனில், இரண்டு பேருமே, தங்கள் கருத்துககு ஆதரவாய், நிறைய ஆதாரங்களைக் காட்டியுள்ளனர்.

அப்படியானால் எது நிஜம்?

அராய்ச்சியாளர்களுக்கு, இன்னும் இரண்டு பேர

## ரெளடிகள்

பெண்களுக்கு அடுத்து விளம்பர நிறுவனங்கள் குழந்தைகளைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்கின்றன. குழந்தைகளின் மனத்தைப் பிடித்து விட்டால் பிறகு அவர்கள் பெற்றோர்களைப் பிடுங்கி எடுக்கத் தொடங்கிவிடுவார்கள். பெற்றோர்கள் வாங்கிக் கொடுத்துதான் ஆக வேண்டும்.

நியூட்ரமுல் விளம்பரத்தில் நியூட்ரமில் சாப்பிட்

அடித்து வீழ்த்தலாம் என்று விளம்பரம் செய்யப்படுகிறது. 'விளங்குங்கள் நியூட்ரமுல் வஸ்தாதாக' என்பது விளம்பர வாசகம். விளம்பரம் செய்வதில் கம்பெனிகள் போடுகிற போட்டி எங்கு போய் நிற்கப் போகிறதோ?



FREE E - BOOKS , www.thamizham.net.,

நான் அடையாளம் காட்டுகிறேன். ஒருவர்: வீரபாண்டியக் கட்டபொம்மனோடு நேரடியாகப் போரில் ஈடுபட்ட கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ். இன்னொருவர் தமிழக அரசின் முன்னாள் செயலாளர் *E. U.* தாமோதர், *I. A. S.*

இவர்களை எங்கே சந்தித்து, வீரபாண்டியக் கட்டபொம்மனைப் பற்றிய நம் சந்தேகங்களைக் கேட்பது என்கிறீர்களா? இதோ அவர்களின் முகவரி:—

முப்பது வருடங்களுக்கு முன்னே போய், "மெயில்" என்னும் ஆங்கில நாளேட்டின் கதவைத் தட்டுங்கள். 1958 ஜூன் 7 முதல் 10 ஆம் தேதி வரை, அந்த ஏட்டில், கட்டபொம்மனைப் பற்றிய அற்புதமான ஆய்வுக் கட்டுரை ஒன்று தொடராக வந்துள்ளது. அந்தக் கட்டுரையை எழுதியவர்தான் *E. U.* தாமோதர். அரசாங்கக் குறிப்புகளை ஆதாரமாக வைத்து அவர் அக்கட்டுரையை எழுதியுள்ளார்.

கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ், "எனது ராணுவ நினைவுக் குறிப்புகள்" என்று ஒரு நூல் எழுதியுள்ளார். அந்நூலில் 19 பக்கங்கள் (62 முதல் 80 வரை) கட்டபொம்மனைப் பற்றியும், அவனோடு அவர் நடத்திய போரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.


**சுட்டி — தொடர்பு முகவரி :**

**AP 688, H பிளாக், அண்ணா நகர்,**

**சென்னை-600 040**


தாமோதர், வெல்ஷ் இரண்டு பேருமே, வீரபாண்டியனின் வீரத்தை வெகுவாகப் புகழ்ந்துள்ளனர். அதே நேரத்தில், ஜாக்சன் துரையைப் பார்க்க அவன் ஊர் ஊராய்ச் சுற்றியதையும், முதலில் வெள்ளையர்களுக்குப் பணிந்தே அவன் நடந்து கொண்டதையும் அவர்கள் மறைக்கவில்லை.

இரண்டு பேரும் சொல்வதைப் படித்த பின்பு, கட்டபொம்மனைக் 'கொள்ளைக்காரன்' என்று தள்ளவும் முடியவில்லை; 'முதல் சுதந்திர வீரன்' என்று கொள்ளவும் முடியவில்லை. இரண்டிற்கும் இடையில் அவன் வேறெங்கோ நிற்கிறான். தேடினால் கிடைப்பான்.

ஒரு *Tall piece:*— தற்போது நம் வீரபாண்டியக் கட்டபொம்மனைப் பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பது யார் தெரியுமா? செக்கோஸ்லோவியா நாட்டு அறிஞர் ஜான் பிலிப்ஸ்கி.

—சுபவீ

FREE E - BOOKS , www.thamizham.net.,

# 7000 ஆடுகள்



மனித இனம் கற்காலத்தில் பச்சை மாமிசத்தைத் தின்று கொண்டிருந்தது. நாகரிகம் வளர வளர அறிவும், ஜீவகாருண்ய உணர்வும் வளர்ந்தது. புலால் உணவைக் குறைக்கத் தொடங்கியது.

இக்காலத்தில் சிறு நீரகக் கோளாறுகளுக்கும், திடீர் மாரடைப்புக்கும், புற்று நோய்க்கும் புலால் உணவும் ஒரு முக்கியமான காரணம் என்று விஞ்ஞானிகள் நிரூபித்து விட்டதால், மேலை நாடுகளில் புலால் உண்ணாதவர் எண்ணிக்கை பெருகி வருகின்றது.

இந்நிலையில் நம் நாட்டில் புலால் உண்பவர் எண்ணிக்கை பெருகி வருவது வருந்தற்குரியது. அதுவும், வெளிப்படையாக உண்ணாமல் கடவுளுக்குப் பலி என்று புலால் வெறியைத் தணித்துக் கொள்வது கண்டனத்துக் குரியது. புலால் உணவு ஒழிவதற்கு முன்பாக இந்தப் போலித்தனம் ஒழிய வேண்டும்.

கடவுள் பேரில் பலி கொடுப்பது சட்ட பூர்வமாகத் தடை செய்யப்பட்டிருந்த போதிலும், ஆந்திர மாநிலத்தில் சென்ற மாதம் சூரியப்பேட்டைக்கு அண்மையில் உள்ள ஒரு குன்றில், கிராமவாசிகள் 7000 ஆடுகளை பலி கொடுத்துள்ளார்கள். குன்றில் எழுந்தருளியிருக்கும் சாமுண்டேசுவரி பெயரில் எங்கு பார்த்தாலும் பிணக் குவியல்! ரத்த வெள்ளம்.

இந்த அநாகரிகச் செயலை. எதிர்த்துச் சிலர் வழக்குத் தொடுத்தபோது, ஆந்திர உயர்நீதி மன்றம் கோயிலிலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் வெட்டலாம் என்று தீர்ப்பளித்தது. சட்டத்தின் பாதுகாப்பில் பசுத்தோல் போர்த்திய புலியாக ஒரு போலிச் சமுதாயம் இங்கே உலாவுவதை இனிப் பொறுக்க முடியாது.

—சுட்டிபாரதி

திருமணம், சொத்து விவகாரங்கள், உடல் நலப் பிரச்சனைகள், விரிவான ஆலோசனைகள் பெற எழுதவும். ஆலோசனைக் கட்டணம் ரூ. 10-00.

எம். வெங்கட், 27பி, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600 053.



FREE E - BOOKS , www.thamizham.net.,

73வது இதழில் ஒரு தவறு இருக்கிறது. 'ஒருவழிப்பாதை' என எழுதப்பட்ட போர்டு இருக்கும் சாலை வழியே செல்லலாம். திரும்பித்தான் வரக்கூடாது. வழி இல்லை (NO ENTRY) என்று எழுதப்பட்டிருந்தால்தான் அச்சாலையில் வாகனங்களில் போகக்கூடாது என்று அர்த்தம். —செ. மதுக்குமார், மதுரை-625001.

★ நல்ல உடல் வலிமைப் பெற்றிருந்தும் கூட 'தங்களை' தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளாமல் மக்களை ஏமாற்றிப் பணம் பண்ணும் 'கழைக் கூத்தாடிகள்' நிலை குறித்து கண்டித்து எழுதப்பட்ட கட்டுரை சிந்தனைக்குரியது. —பி. எல் பரமசிவம்

★ பைசா பெறாத 'ஜவ்வு மிட்டாய்' விளையாட்டை (கிரிக்கெட்) தெரியாமல் புரியாமல் ஒரு மோகத்தில் போலியாய் ரசிக்கும் செம்மறியாட்டுக் கூட்டம் கார்டுனைப் பார்த்தாவது திருந்த வேண்டும்.



—எம். பஷீர், ஹைத்ராபாத்

★ 'பரிதாபத்துக்குரிய பயணிகள்' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் உள்ள செய்தி மனதை சஞ்சலப் படுத்தியது. போகிற போக்கைப் பார்த்தால் நாம் தமிழன், இந்தியன் என்று சொல்லிக் கொள்வதற்கே வெட்கப்பட வேண்டியிருக்கும் போலிருக்கிறதே!

— D. சிவக்குமார், குடந்தை

★ மன்னர் குல வாரிசுகளின் வரிபாக்கி விபரங்கள் நமது அரசின் அடிமைத் தனத்தைக் காட்டுகிறது.

— M. சம்பத், வேலாயுதம் பாளையம்-639117.

# வாசகர் எதிரொலி

★ பார்ப்பனீயத்தை எதிர்த்த பெரியார் பார்ப்பனர்களையும், அவர்களின் ஆயுதங்களாகப் பயன்பட்ட பத்திரிகைகளையும் கடுமையாக தாக்கிய போதும் கல்கியும் ஆனந்த விகடனும் பெரியாரைப் பாராட்டிய பத்திரிகைதர்மம் இன்று இல்லாது போனதேன்?

—இரணியல் கலை, சென்னை-57.



FREE E - BOOKS , www.thamizham.net.,




எல்லா நோய்களுக்கும் மூலகாரணம் துன்பமே என்பது கீழ்த்திசை நாட்டு மக்களின் நீண்ட நாள் நம்பிக்கை.

ஒருவரை இடைவிடாது மகிழ்ச்சியில் வைத்திருப்பதன் மூலம் எந்த நோயையும் குணப்படுத்திவிடமுடியுமென பழைய சீன மருத்துவமுறை கூறுகிறது.

ஆனால் நோயாளியை எந்நேரமும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவதென்பது நடைமுறை சாத்தியமல்ல—சில நேரங்களில் நோயாளியின் மகிழ்ச்சி மற்றவரின் துன்பமாகவும் அமையக் கூடும்; மற்றும் நோயாளியின் மனோநிலையைப் பொருத்து, அவர் மகிழ்ச்சி கைக் கெட்டும் தூரத்திலோ, எட்டாக்கனியாகவோ கூட இருந்துவிடக் கூடும்.

மகிழ்ச்சி என்பது தேடிச்செல்வதல்ல—அது நாம் உருவாக்குவதாகும் என்ற அடிப்படை உண்மையை நோயாளி புரிந்து கொண்டால் மகிழ்ச்சி எளிதாகும்.

அவரது ஆளுமையை, அவரை வெளிக்கொணரும் வழியை நோயாளிக்குக் கற்று தருவதே மகிழ்ச்சி மருத்துவமாகும் தையல், ஓவியம், இசை, நடனம், விளையாட்டு போன்ற மனம் லயிக்கும். ஆயிரக்கணக்கான எளிய வழிகளில் நோயாளி விடா மகிழ்ச்சியை உருவாக்கிக்கொள்ள முடியும்.

இத்தகைய மகிழ்ச்சி உடலில் பரவியிருக்கும்போது, நம் உடல் திசுக்கள், ஆக்சிஜனால் நிரப்பப்பட்டு, வெள்ளை அணுக்கள் எந்த நோய்க்கிருமியையும் அடித்து விரட்டும் வலிமை பெறுகின்றன; சுரப்பிகள் சரியாக சுரக்கின்றன; கழிவுப்பொருட்கள் நீங்குகின்றன.

நம் மகிழ்ச்சிக்கு நிலையான வழி, மற்றவர்களை எப்போதும் நாம் மகிழ்ச்சிப்படுத்த முயல்வதாகும்; பணியாற்றுவதாகும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க, என் கடன் அவர்கட்கு பணி செய்து கிடப்பதே" என்ற சமூகப்பார்வை தரும் மகிழ்ச்சியை அனுபவிப்பவர்களுக்கு எந்த நோயும் வருவதில்லை.

—சித்தன்

(அடுத்து: நகம் வழி மருத்துவம்)



FREE E - BOOKS , www.thamizham.net.,

டாக்டர். இராம. குருநாதனின்

## 'சங்கப்பாட்டும் ஜப்பானியக் கவிதையும்'

சங்கப்பாட்டையும் ஜப்பானியக் கவிதையையும் ஒப்பீடு செய்கிற தலைப்பே வியப்பை வழங்குகிறது. இதன் ஆசிரியரே குறிப்பிடுகிற மாதிரி 'உலக இலக்கிய ஒருமை எண்ணத்திற்கு கால்கோள்' இந் நூல். தமிழ், ஜப்பானியக் கவிதை வடிவங்களை இந் நூலில் வெகு நேர்த்தியாக ஆராய்கிறார். இயற்கையும் மனித உணர்வும் என்கிற தலைப்பின்கீழ் புதிய கருத்துக்கள் இடம் பெற்று இருக்கின்றன. சங்கச் செய்யுள் மேற்கோள்கள் நிறைய இடம் பெற்று விட்டன. இதனைக் குறைத்து, ஜப்பானியக் கவிதைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கலாம்.

புத்தகப் பிழிவு

இந்நூலிலிருந்து......

❊ சங்கச் செய்யுள்களில் ஆசிரியம் தலைமை இடம் பெற்றது. ஆசிரியப்பாவிலிருந்து பிற யாப்பு வடிவங்கள் தோன்றியிருக்கலாம். ஆசிரியப்பா உரைநடை போன்ற தன்மையிலும் நடப்பதாகும்.

★ வாழ்க்கைக்கு இயற்கையே மூலப்பாடம். இயற்கை ஒரு திறந்த புத்தகம்.

❊ கவிதை எழுதுவது ஜப்பானியர்களால் மிக உயர்ந்த கலையாகப் போற்றப்பட்டது. ஜப்பானியக் கவிதை உணர்வை எவ்வளவுதான் மொழி பெயர்த்தாலும் கவிதையின் ஆன்மாவை அவ்வளவு துல்லியமாகக் காட்டி விட முடியாது.

★ ஜப்பானியக் கவிதை வரலாறு பழமையுடையதாகும். ஓரளவு சீனத்தின் கவிதை மரபைத் தழுவியது.

❊ ஜப்பானியக் கவிதை 17, 18- ஆம் நூற்றாண்டுகளில் ஹைகு என்ற மணிச்சிறகை விரித்து பல நாடுகளையும் தன்பால் ஈர்த்துக் கொண்டது [redacted]

★ இளவேனில் காலத்தை உணர்த்தும் [redacted]
தூதுவனாக குயிலை தமிழிலக்கியம் [redacted]
கூறுகிறது. ஜப்பானில் 'உகிஷ்' என்னும் [redacted]
பறவை இச் சிறப்பைப் பெறுகிறது. [redacted]
(SWEETEST JAPANESE SQNGSTER)



FREE E - BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை

படைப்பாளி வாழ்க்கை இலக்கியம் — *(15.00)* அ. மார்க்ஸ்- *M/s.* இராதா பதிப்பகம், *70/2*, நிஜாம் காலனி, புதுக்கோட்டை-*622 001.*

இந்தி பொது மொழியா? — ஆங்கில நூல் (2.00) மறைமலை அடிகள் - *M/s*. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், *1/140*, பிரட்வே, சென்னை-600108.

இனிக்கும் பாட்டு — சிறுவர்க்கான பாடல்கள் (1.50) வாணிதாசன் — *M/s.* பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600 108.

குழந்தை நோய்களும் மருந்துகளும் — (3.00) *K.S.* லட்சுமணன் - *M/s.* தமிழ் நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை-600 017.

மனிதக்கல் — சிறுகதைத் தொகுப்பு (10.00)—*T. S.* ரவீந்திரதாஸ் - *M/s.* வந்தனா பதிப்பகம், 5/2 கங்கையம்மன் கோயில் 2-வது குறுக்குத் தெரு, வடபழனி, சென்னை-600026.

ஒருமழலையின் பயணம் சமூக நாவல் (5.00)—*T.S.* ரவீந்திர தாஸ் - *M/s.* வந்தனா பதிப்பகம்.

*COMMUNIST-Supplement of SOCIALISM THEORY AND PRACTICE - Soviet Monthly*

உற்ற நண்பர்களின் உரையாடல் (இந்தியாவுக்கு சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் மிகையில் கோர்பச்சேவின் அதிகார பூர்வமான தேச விஜயம் நவ. (25 - 29, 1986)

மேற்கண்ட இரு நூல்களும் வெளியீடு:—


*M/s.* சோவியத் நாடு பிரசுரங்கள், 114, தியாகராய ரோடு, சென்னை-600 017. (விலை குறிப்பிட வில்லை).

அண்ணா - சில நினைவுகள் (20.00) — கவிஞர் கருணானந்தம், *M/s.* பூவழகி பதிப்பகம், 29/2, சீநிவாசப் பெருமாள் சந்நிதித் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014.

**கல்வியில் மாறுதல் தேவை — ஆனால் அணுகுமுறை சரியில்ல** (7.50) — ம. பொ. சிவஞானம் *M/s.* பூங்கொடிப் பதிப்பகம், 14, சித்திரைக் குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை-600 004.



FREE E - BOOKS , www.thamizham.net.,




ஆசிரியர்: கு. நாராயண பாரதி, வெளியிடுபவர்: இ. ராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-600 005.
முகவரி: 1494, அண்ணா நகர், சென்னை-600 040.



FREE E - BOOKS , www.thamizham.net.,



## நட்சத்திரம் வெடிப்பு: காவலூர் விஞ்ஞானிகள் கண்டனர்



நட்சத்திரம் ஒன்று வெடித்துச் சிதறியதை காவலூர் விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து விஞ்ஞானிகள் 26ந்தேதி இரவில் பார்த்தனர்; இது அபூர்வமான நிகழ்ச்சியாகும்.

காவலூர் இந்திய விண்வெளி அறிவியல் ஆராய்ச்சிக் கழக டைரக்டர் பேராசிரியர் பட்டாச்சாரியா இது பற்றி நிருபர்களிடம் கூறுகையில், 'நட்சத்திரம் வெடித்தபோது அதிலிருந்த பொருட்கள் பல மடங்கு விசையுடன் சிதறின என்ருர்

இந்த நிகழ்ச்சி 1,86,000 "ஒளி வருடங்களுக்கப்பால் நிகழ்வதால் ஒரு ஒளி வருடம்= 365×24×60×60×1,86,000 மைல்கள்) இடிபாடுகள் புவி மண்டலத்தை எட்டுவதற்குள் எரிந்து விடுவதால், பூமிக்கு எவ்வித ஆபத்தும் நேரிடுவதில்லை.

1604-ல் ஜெர்மன் விண்வெளி விஞ்ஞானி கெப்ளர் நட்சத்திரம் (சூப்பர்நோவா) வெடித்துச் சிதறியதை கண்டு ஆராய்ந்தார். 1572, 1054-ம் ஆண்டுகளிலும் இதுபோன்று நிகழ்ந்துள்ளன.

ஒரு நட்சத்திரம் எரிந்து 'மடியும்' நிகழ்ச்சி 15 நாட்கள் நடக்கக் கூடியது என்று பேராசிரியர் பட்டாச்சாரியா கூறினர். 20ந்தேதி நடந்தது 4 அல்லது 5வது நாள் நிகழ்ச்சியாக இருக்கலாம் என்ருர். "சூப்பர்நோவா" நட்சத்திரங்கள் நீண்ட ஆயுள் உடயவை அல்ல என்றும். சீக்கிரத்தில் எரிந்து சிதறி விடுகின்றன என்றும் மேலும் கூறினர்.

ஒரு நட்சத்திரத்தின் சராசரி ஆயுட்காலம் ஒரு சில பத்து லட்சம் ஆண்டுகள் என்றும், ஆனல் சூரியன் 450 கோடி ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறது என்றும் அவர் கூறினர்.



**வேல் டைப் பௌண்டரி**

★ புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
★ எல்லா மொழி அச்செழுத்துக்கள்
★ போஸ்டர் எழுத்துக்கள்
★ எல்லாவித அச்சக உபகரணங்கள்.

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-600 007. தொலைபேசி: 27087




FREE E - BOOKS , www.thamizham.net.,



# புகையை நிறுத்த வேண்டுமா?

சிகரெட், பீடி பிடிப்பதால் வாய், நுரையீரல், இரைப்பைகளில் புற்று நோய் வருகிறது என்பது முடிவாகி விட்ட செய்தி. பல விஞ்ஞான உண்மைகள் தவறாகி விடுவதைப் போல புகையும் ஒரு நாள் நல்லது என்று வந்தாலும் வரும் என்று நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.

புகையை விட வேண்டுமானால் முதலில் புகையால் தீங்கு நிச்சயம் என்று நம்புங்கள். கெட்ட பழக்கம் என்று உங்களுக்குள் நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள். நாளை முதல் பாருங்களேன் உங்கள் ஆழ்மனம் ஓர் எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கும். ஆனல் அதை காது கொடுத்து கேட்கப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போது அந்தப் பண்டத்தின் மீது ஒரு வெறுப்புத் தோன்றும். பிறகு மெதுவாக அந்த தீய புகை மண்டலத்தை விட்டு வெளியேறி விடலாம்.

சிகரெட், பீடி பிடிப்பவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று நினையுங்கள். அப்போதுதான் அதை உங்கள் மனம் வெறுத்து ஒதுக்கும். அதற்காக இதைப் புகையாளியிடம் சொல்லிக் கொண்டிராதீர்! பகையாளி ஆகி விடுவார்கள். எதற்காக அந்த வம்பு?

என் நண்பர் ஒருவர், அவரிடம் ஏதாவது சிக்கலான விஷயம் பேசினுலும், அல்லது குடும்பப் பொருளாதார பிரச்சினைகள் பற்றிப் பேசத் தொடங்கினுலும், அல்லது ஏதாவது ஆலோசனை கேட்டாலும்— போதும், உடனே எல்லா பாக்கெட்டுகளையும் துழாவத் தொடங்கி விடுவார். பல சமயங்களில் அவரிடம் தீப்பெட்டி இருக்கும்; சிகரெட் இருக்காது. சிகரெட் இருக்கும்; தீப்பெட்டி இருக்காது, ரொம்ப எரிச்சலாகி விடுவார். ஒரு நாள் நான் தலையிடுவது என்று முடிவு செய்தேன் என் பாக்கெட்டிலிருந்து கால்கு லேட்டரை எடுத்து அவரிடம் நீட்டினேன். கொஞ்ச நேரத்தில் சிகரெட்டை மறந்து விட்டார். இது மாதிரி நீங்களும் செய்து பார்க்கலாமே. சிகரெட் ஞாபகம் வரும் போது கால்குலேட்டரை எடுத்துக் கொள்ளுங்கள். ஏதாவது கூட்டிப் பெருக்குங்கள். —சுட்டி பாரதி.





FREE E - BOOKS , www.thamizham.net.,

# புகழ் பெற்ற மனிதர்கள் பற்றி...

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர், வரலாற்று சிறப்புள்ளவர் என்று பாராட்டப்படும் உலகத் தலைவர்களின் இயல்புகளை உளநூற் தத்துவத்தின் துணை கொண்டு ஆராய்ந்து ஏப்ரஹாம் மாஸலோவ் சில முடிவுகளை வழங்குகிறார். குண நலன்கள், வாழ்க்கை முறை என்கிற இரு பகுப்பின் கீழ் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

குண நலன்கள் :

1. ஏன், எப்படி என்ற தர்க்கங்களை விடுத்து தங்களைச் சூழ்ந்துள்ள மக்களை குறை நிறைகளுடன் அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை உடையவர்கள்.

2. அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை இருப்பதால் அதற்குத் தக்கவாறு முடிவுகளை எடுப்பவர்கள்.

3. சுயநலமில்லாமலும், ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உடையவர்களாகவும் இருப்பதால் எதையும் வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் எடுத்துக் கொள்ளும் உள்ளம் உடையவர்கள்.

வாழ்க்கை முறை :

1. உள்ளுணர்வுகளை மதிக்கத் தெரிந்து வாழ்வார்கள். தவறுகளையும் தோல்விகளையும் ஒத்துக்கொள்வார்கள். தங்களது எலலா செயல்களுக்கும் பொறுப்பேற்பார்கள்.

2. பாதுகாப்பானது பரம்பரை வழி என்ற சிந்தனையை விடுத்து புதிய அணுகு முறைகளால் சோதனை செய்து பார்ப்பார்கள்.

3. தாங்கள் தேர்ந்தெடுத்தத் துணிந்த இலக்குகளை அடைய அயராது உழைப்பார்கள். தங்களால் முடிந்த அளவு நல்லவர்களாக இருக்க பெரிதும் விரும்புவார்கள்.

புகழ் பெற்ற சிலரின் குண நலன்கள், வாழ்க்கை முறை மேற்கண்டவற்றோடு ஒத்துப்போகிறதா ?...... யோசித்துப் பாருங்களேன் !



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டி

**சுட்டி சந்தா:** 12 இதழ்களை அஞ்சலில் பெற விரைவில் ரூ. 10.00 பணவிடை செய்யுங்கள்.

**முன் இதழ்கள்:** எண் 1 முதல் 11, 14, 23, 27, 30, 31 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்புங்கள். உடனே தபாலில் வந்து சேரும். 50-வது இதழ் 75 காசு.

**சுட்டி இலவசம்:** சுட்டியை அறியாத விரும்பி ஏற்கக்கூடிய நண்பர்கள் உறவினர்களின் முகவரிகளை அனுப்புக. உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் அனுப்பப்படும். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

**சுட்டி வரவில்லை:** சுட்டி 10 தேதிக்குள் கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் உடனே எழுதுங்கள். மீண்டும் அனுப்புகிறோம் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. சந்தா எண். குறிப்பிடல் அவசியம்.

**ஏதாவது செய்யுங்கள்:** புதியவர்களை சந்தாதாரராக்குங்கள். அறியாதவர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகளை நியமிக்க உதவுங்கள். 10 இதழ்களை வாங்கி நண்பர்களுக்குள் விலைக்கு விற்பனை செய்யுங்கள். வியாபார ஸ்தாபனங்களோடுதொடர்புவைத்து விளம்பரங்கள் வாங்கித் தாருங்கள்.

**சுட்டி இலவச நூலகம்:** அனைவருக்கும் பயன்படக்கூடிய வண்ணம் சுட்டி நூலகம் செயல்பட உள்ளது. படிப்புணர்வை பரவலாக்குவதுதான் அதன் நோக்கம். எனவே, சமூகஅக்கறையுள்ள அனைவரும் நூலகத்தை வளப்படுத்துங்கள். பலரும் பயன்பட நூல்களை அனுப்புங்கள். நூல்களில் அன்பளிப்பு என்று போட்டு பெயரையும் முகவரியையும் எழுதத் தவறாதீர்கள்.

எல்லாத் தொடர்புகளுக்கும்:

**AP 638, அண்ணா நகர், சென்னை-600 040.**

**சுட்டி வாசகர் இயக்கம்:** விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் பட்டு புகைப்படத்தோடுகூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. உறுப்பினர் ஆனவர்கள், உடனடியாக செயலில் இறங்கவேண்டும்-என்னென்ன செயல்கள் செய்யப்பட்டன என்பதுபற்றி உடனுக்குடன் செய்திகள் அனுப்பப்படவேண்டும். புதிய உறுப்பினர்கள் சேர்ப்புப்பற்றி **கவனத்தில்** எடுத்துக் கொள்ள வேண்டும்.

**விண்ணப்பங்கள் தேவைப்படுவோர் அஞ்சலட்டையில் தொடர்பு கொள்ளவும்.**

— வாசகர் இயக்க அமைப்பாளர்



FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண்: TN/MS(N)/317

# சக்தி சுகர்ஸ் லிமிடெட்

# SAKTHI SUGARS LIMITED

## கிராமப்புற வளர்ச்சிக்கு வழி வகுப்பவர்கள்

தமிழ்நாடு பெரியார் மாவட்டத்தில் உள்ள 400 கிராமங்களில் சுமார் 150 லட்சம் மக்களுக்கு உறுதுணையாக சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஏராளமான கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை ஏற்று முடித்துள்ளது. பல்வேறு கிராமப்புற வளர்ச்சிப் பணிகளுக்காக சக்தி சுகர்ஸ் ரூ.210 லட்சம் செலவு செய்துள்ளது.

**1. சக்தி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி**

சக்தி நகரில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு (நவீன தொழில் நுட்பக் கல்வி நிலையத்தை) பாலிடெக்னிக் நிறுவி அது 10-9-81 முதல் சக்தி நகரில் செயல்பட்டு வருகின்றது. இந்த கல்வி நிறுவனத்தில் டிப்ளமோ பட்டப் படிப்பு வரை கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 200 லட்சம். வருடம் 200 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**2. சக்தி உயர்நிலைப்பள்ளி, சக்தி ஆரம்ப பள்ளி**

சக்தி ஆரம்பப் பள்ளி 1966ம் ஆண்டும் சக்தி உயர் நிலைப்பள்ளி 1970ம் ஆண்டும் நிறுவப்பட்டன, கிராமப் புறத்தின் சுமார் 1100 குழந்தைகள் இந்தப் பள்ளி மூலம் பயன் பெறுகின்றனர். இது ரூ. 30 லட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.

**3. வி. எம். கைலாசம் மருத்துவமனை, சக்தி நகர்**

கிராமப் பகுதியிலுள்ள மக்களின் சேவையைக் கருத்தில் கொண்டு எக்ஸ்ரே யூனிட்டுகள் மற்றும் ஆப்ரேஷன் தியேட்டர் ஆகிய வசதிகளுடன் கூடிய 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ரூ. 60 லட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.

**4. சாலை அபிவிருத்தி திட்டங்கள்**

கிராமப் பகுதிகளுக்கும், விளை நிலங்களுக்கும் இணைக்கிய சாலைப் போக்குவரத்து ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகள் உரம் மற்றும் விளை பொருட்களை வண்டிகள் மற்றும் லாரிகள் மூலம் எடுத்துச் செல்ல உதவி புரிகின்றது.

தலைமை அலுவலகம்:
100, ரேஸ் கோர்ஸ் ரோடு,
கோயமுத்தூர்-641 018.

பதிவு அலுவலகம் &
தொழிற்சாலை
சக்தி நகர்-638 315
ஈரோடு ஆர்.எம்.எஸ்,

ADVT.

http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL)
FREE E - BOOKS , www.thamizham.net.,